Registered as a Newspaper

நல்லூர் [illegible] நூலகம்
மாநகரா[illegible] 04
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி — Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாதி 23 | [09-10-1993] | சனிக்கிழமை | ஓசை 233

## வெடிப்பொருள்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்

சிறிலங்கா இராணுவத்தின் யாழ்தேவி இராணுவநடவடிக்கை இடம்பெற்ற புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி பகுதிகளில் நடமாடுபவர்கள் வெடிப்பொருள்கள் குறித்து அவதானமாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இப் பகுதியில் காணப்படக் கூடிய மர்மமான பொருள்களை பரீட்சித்துப் பார்க்க முயலவேண்டாம் எனவும் அவ்வாறான பொருள்கள் ஏதாவது காணப்பட்டால் உடனடியாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். இவ் இராணுவ நடவடிக்கையின் போது மிதிவெடிகள், பொறிவெடிகள் என்பவற்றை இப் பகுதியில் இராணுவம் வைத்துவிட்டுச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதனால் இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. தலைவர் கருணாநிதி அரசியலில் இருந்து ஓய்வு!

## கட்சிக்குள் நெருக்கடியே காரணமாம்

[சென்னை]

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிவித்துள்ளார். தி.மு.க வின் ஏடான முரசொலி மூலம் இத் திடீர் முடிவை கருணாநிதி அறிவித்துள்ளார் இவரது இம் முடிவிற்கு அண்மையில் தி.மு.க விற்குள் எழுந்த நெருக்கடியை தீர்த்து வைக்க முடியாமல் போனமையும், இடைத் தேர்தல் தோல்விகளும், விடுதலைப் புலிகள் தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளார்கள் என்ற கருணாநிதியின் அறிவிப்பால் எழுந்த நெருக்கடியுமே காரணம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



தனது அரசியல் ஓய்வு குறித்த அறிவிப்பில், நாளை சென்னையில் நடைபெறவிருக்கும் முப்பெரும்விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின்னர் தான் ஓய்வு பெறுவதாகத் தெரிவித்துள்ளார். மேலும், தொடர்ந்தும் சமுதாயமற்றும் இலக்கியப் பணிகளில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தீவிர அரசியலில் இருந்து விலகி இருக்கப் போவதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி எடுத்துள்ள முடிவில் எந்த மாற்றமும் இல்லை என கட்சியின் பொதுச்செயலர் அன்பழகன் நேற்று அறிவித்தார்.

சென்னையில் செய்தியாளர் மாநாட்டில்பேசிய அன்பழகன் கட்சித் தலைவர் மு. கருணாநிதி மனக்கவலையால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். செய்தியாளரை சந்திக்கும் மனநிலையில்தாம்இல்லை என்று கருணாநிதி தம்மிடம் கூறியதாகவும் அன்பழகன் தெரிவித்தார்.

சோர்வில் இருந்து விடுபட வேண்டி இந்த பொறுப்புச் சுமையை விட்டுவிட வேண்டும் என கருணாநிதியே முடிவெடுத்து யாரையும் கலந்தாலோ

(4ஆம் பக்கம் பார்க்க)

### கட்சியை வழிநடத்துமாறு அன்பழகனிடம் பணிப்பு

(சென்னை)

தி.மு.க கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பை கட்சியின் பொதுச் செயலர் அன்பழகனும் ஏனைய முன்னணி தலைவர்களும் மேற்கொள்ள வேண்டும் என மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீவிரமான அரசியலில் இருந்து விலகுவதாக கருணாநிதி அறிவித்த பின்னர் நேற்று

தொண்டர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார். கட்சியின் முன்னணித் தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று தனது முடிவை வாபஸ்பெறப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

முன்னதாக கருணாநிதி அரசியலில் இருந்து ஒதுங்கும் முடிவை கைவிட வேண்டும் எனக்கோரி அவரின் இல்லம் முன்பாக கட்சித் தொண்டர்

### கருணாநிதி, கோபாலசாமி வீடுகளின்முன் மக்கள்

எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெறப்போவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்ததையடுத்து அவரின் இல்லம் முன்பாக ஆதரவாளர்

அவரின் ஆதரவாளர்களும் கோபாலசாமியின் வீட்டிற்கு முன்பாக திரண்டுள்ளனர்.

கோபாலசாமியின் ஆதரவாளர்கள் இரத்தத்தினால் எழுதிய கடிதம் ஒன்றில் ஒற்று

## பதுங்கியிருந்து தாக்கியதில் 2 போராளிகள் வீரச்சாவு

(அம்பாறை)

அம்பாறை விநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்துநடத்திய தாக்குதலில் இரு விடுதலைப்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் ஜீவாகரன் / ஜீவா (மூத்ததம்பி புஸ்பராசா-தம்பிலுவில் அம்பாறை) 2-ம் லெப்டினன்ட் நிலாந்தன் / தேவதாஸ் (கணபதிப்பிள்ளை தேவதாஸ்- பனங்காடு அக்கரைப்பற்று) ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சிறிலங்கா கடற்படைமீது காவல்துறையினர்தாக்குதல்

(நமது நிருபர்)

வடமராட்சி நாகர் கோவில் கடற்பரப்பில் மீன்பிடி படகுகள் மீது தாக்குதல் நடத்திய கடற்படை படகுகளை தமிழீழக் காவல்துறையினர் விரட்டியடித்தனர்.

நேற்று முன் தினம் காலை 5. 30 மணியளவில் நாகர் கோவில் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு மீன்பிடி படகுகள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தவாறு இரு விசைப்படகுகளில் வந்த கடற்படையினர் மீது கரையோர காவல் கடமையில் ஈடுபட்டிருந்த தமிழீழ காவல் துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர் இதனை தொடர்ந்து தப்பியோடிய கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தியவாறு கரையைநோக்கி வந்தபோது காவல்துறையினர் மீண்டும் தாக்குதல் நடாத்தினர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

# 'யாழ்தேவி' இடைநிறுத்தம் தென்பகுதியில் ஆத்திரம்

(கொழும்பு)

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி ராணுவ நடவடிக்கை இடை நடுவில் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து தெற்கிலுள்ள கடும் போக்காளர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். இந் நிலையில் பாதுகாப்பு அமைச்சு அந் நடவடிக்கை குறித்த ஓர் விரிவான அறிக்கையை வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது

இது தொடர்பாக நேற்று பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

றமையை தென்னிலங்கை பத்திரிகைகள் தமது கட்டுரைகளில் கடுமையாக கண்டித்துள்ளன. கடும் போக்குடைய சிங்களவர் கருத்துக்கு இவை முக்கியத்துவம் அளித்தன.

இராணுவம் புலிகளை நசுக்கக்கூடிய நிலையில் அதை விடுத்து பின்வாங்கியதாக சிங்கள கடும் போக்காளர்கள் கருதுவதாகவும், புலிகளின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை மீண்டும் நாளை ஆரம்பம்

கிளாலி - பூநகரிக்கான படகுச்சேவை மீண்டும் நாளை ஆரம்பமாகவுள்ளதென அரசியற் துறையினர் அறியத்தருகின்றனர். இச் சேவை நாளை

பெறவுள்ளது.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இப் படகுச்சேவை சில தினங்

கருணாநிதியின் அறிவிப்பால் எழுந்த நெருக்கடியுமே காரணம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனது அரசியல் ஓய்வு குறித்த அறிவிப்பில், நாளை சென்னையில் நடைபெறவிருக்கும் முப்பெரும்விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபின்னர் தான் ஓய்வு பெறுவதாகத் தெரிவித்துள்ளார். மேலும், தொடர்ந்தும் சமுதாயமற்றும் இலக்கியப் பணிகளில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தீவிர அரசியலில் இருந்து விலகி இருக்கப் போவதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி எடுத்துள்ள முடிவில் எந்த மாற்றமும் இல்லை என கட்சியின் பொதுச்செயலர் அன்பழகன் நேற்று அறிவித்தார்.

சென்னையில் செய்தியாளர் மாநாட்டில்பேசிய அன்பழகன் கட்சித் தலைவர் மு. கருணாநிதி மனக்கவலையால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். செய்தியாளரை சந்திக்கும் மனநிலையில்தாம்இல்லை என்று கருணாநிதி தம்மிடம் கூறியதாகவும் அன்பழகன் தெரிவித்தார்.

சோர்வில் இருந்து விடுபட வேண்டி இந்த பொறுப்புச் சுமையை விட்டுவிட வேண்டும் என கருணாநிதியே முடிவெடுத்து யாரையும் கலந்தாலோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியை வழி நடத்துமாறு அன்பழகனிடம் பணிப்பு

(சென்னை)

தி. மு. க கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பை கட்சியின் பொதுச் செயலர் அன்பழகனும் ஏனைய முன்னணி தலைவர்களும் மேற்கொள்ள வேண்டும் என மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீவிரமான அரசியலில் இருந்து விலகுவதாக கருணாநிதி அறிவித்த பின்னர் நேற்று பிற்பகல் தமது இல்லத்திற்கு வெளியே கூடியிருந்த கட்சித் தொண்டர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார். கட்சியின் முன்னணித் தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று தனது முடிவை வாபஸ்பெறப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

முன்னதாக கருணாநிதி அரசியலில் இருந்து ஒதுங்கும் முடிவை கைவிட வேண்டும் என்க்கோரி அவரின் இல்லம் முன்பாக கட்சித் தொண்டர்களும் உறுப்பினர்களும் கூடி

(04ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி, கோபாலசாமி வீடுகளின்முன் மக்கள்

எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெறப்போவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்ததையடுத்து அவரின் இல்லம் முன்பாக ஆதரவாளர்கள் திரண்டிருப்பதைப் போன்று, வை. கோபாலசாமியை கட்சியிலிருந்து விலக்காதே என்ற கோஷத்துடன் அவரின் ஆதரவாளர்களும் கோபாலசாமியின் வீட்டிற்கு முன்பாக திரண்டுள்ளனர்.

கோபாலசாமியின் ஆதரவாளர்கள் இரத்தத்தினால் எழுதிய கடிதம் ஒன்றில் ஒற்றுமையை கருதி கோபாலசாமியை கட்சியிலிருந்து நீக்காதீர்கள் என கருணாநிதியை கேட்டுள்ளனர்.

---

**2ஆம் லெப். மாலதியின் உருவப்படம் உள்ளே.**

---

பிரயோகம் செய்தவாறு இரு

(04ஆம் பக்கம் பார்க்க)

# 'யாழ்தேவி' இடைநிறுத்தம் தென்பகுதியில் ஆத்திரம்

(கொழும்பு)

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி ராணுவ நடவடிக்கை இடை நடுவில் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து தெற்கிலுள்ள கடும் போக்காளர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். இந் நிலையில் பாதுகாப்பு அமைச்சு அந் நடவடிக்கை குறித்த ஓர் விரிவான அறிக்கையை வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது

இது தொடர்பாக நேற்று பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டது கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வரையறைசெய்யப்பட்ட தாக்குதல். நோக்கம் நிறைவேறியபின்பே படைகள் திரும்பியதாகவும் அவ் அறிக்கை கூறுகிறது. 'யாழ்தேவி' இராணுவம் பின்வாங்கி சென்றமையை தென்னிலங்கை பத்திரிகைகள் தமது கட்டுரைகளில் கடுமையாக கண்டித்துள்ளன. கடும் போக்குடைய சிங்களவர் கருத்துக்கு இவை முக்கியத்துவம் அளித்தன.

இராணுவம் புலிகளை நசுக்கக்கூடிய நிலையில் அதை விடுத்து பின் வாங்கியதாக சிங்கள கடும் போக்காளர்கள் கருதுவதாகவும், புலிகளின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை மீண்டும் நாளை ஆரம்பம்

கிளாலி - பூநகரிக்கான படகுச்சேவை மீண்டும் நாளை ஆரம்பமாகவுள்ளதென அரசியற் துறையினர் அறியத்தருகின்றனர். இச் சேவை நாளையும், நாளை மறுதினமும் வழமையான நேரத்திற்கு நடைபெறவுள்ளது.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இப் படகுச்சேவை சில தினங்கள் தடைப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## வீரகேசரி அலுவலகம் பொலிசார் சுற்றிவளைப்பு

### "யாழ்தேவி" செய்தியின் எதிரொலி

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் இராணுவ இழப்புகள் குறித்து செய்தி வெளியிட்டமைக்காக வீரகேசரி பத்திரிகை அலுவலகம் பொலிசாரால் முற்றுகையிடப் பட்டது.

அண்மையில் கிளாலிநோக்கி ஆனையிறவு இராணுவம்மேற்கொண்ட ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கையின்போது இரண்டு டாங்கிகள் இரண்டு கவசவாகனங்களை விடுதலைப் புலிகள் அழித்ததுடன் கைப்பற்றிய ஆயுதங்கள் பற்றிய விபரங்களையும் வெளியிட்டமைக்காகவே அலுவலகம் முற்றுகையிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டாம் திகதி காலை கிராண்பாஸில் உள்ள வீரகேசரி பத்திரிகை அச்சிட்டு வெளியிடப்படும் அலுவலகத்தையே சிறிலங்கா பொலிசார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டதுடன் விசாரணைகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி கொலை மிரட்டல்;

# தமிழர் மீதான தாக்குதலை மறைக்கும் 'றோ'வின் சதி

(சென்னை)

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியை கொல்ல விடுதலைப் புலிகள் சதி செய்வதாக வெளியான செய்திகளை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறனும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாசும் கண்டித்துள்ளனர்.

சிங்கள இராணுவ விமானங்கள் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது குண்டு வீச்சில் ஈடுபட்டுள்ளன. இக் கொடுமைக்கு எதிராக தமிழ் நாட்டில் கொந்தளிப்பு ஏற்படக் கூடாது என்ற உள்நோக்கில் இத்தகைய திசை திருப்பும் செய்திகளை வெளியிடுவதில் இந்திய உளவுத்துறை றோ ஈடுபட்டுள்ளது என ப. நெடுமாறன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் இராமதாஸ் தனது அறிக்கையில் "யாழ்ப்பாணத்தில் இதுவரை நடத்தப்படாத அளவிற்கு படுபயங்கர முப்படைத் தாக்குதல் தமிழர்கள் மீது நடத்தப்பட்டு லட்சக்கணக்கான தமிழர்கள் வீடு, வாசல் உடமைகள் என்பவற்றை இழந்துவிட்டனர். ஆயிரக்கணக்கானோர் பலியாகிவிட்டனர். சிங்கள அரசு இனப் படுகொலை செய்யும் இக்கால கட்டத்தில் ஈழத்தமிழர்களுக்காக அனுதாபமும் ஆதரவும் தமிழகத்தில் எழுந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில் மத்திய அரசின் உளவுத்துறை சுப்பிரமணிய சுவாமியுடன் இணைந்து செய்த சூழ்ச்சியே கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க விடுதலைப் புலிகள் முயற்சிப்பதாக அவிழ்த்து விடப்பட்டுள்ள இந்தக் கட்டுக்கதை என குறிப்பிட்டுள்ளார்.

## இரத்தினபுரி மண்சரிவு 75 பேர் பலியாகினர்

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடும் மழையினால் ஏற்பட்ட மண்சரிவில் 75 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பல மண் குடில்களே மண்சரிவில் சிக்கியதாகவும், இரத்தினபுரியில் பயணிகள் சென்ற பஸ் வண்டியும் மண்சரிவில் அகப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மண்சரிவினால் இரத்தினபுரி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவில் சிக்கிய பஸ்ஸினுள் எத்தனை பயணிகள் இருந்தனர் என்பது தெரியவரவில்லை.

## எறிகணைவீச்சு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு பொதுமக்கள் குடியிருப்புகள் மீது பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. 7 30 மணிமுதல் அரைமணி நேரமாக தொடர்ச்சியாக தாக்குதல் நடைபெற்றன.

அனேகமான ஷெல்கள் வல்லை, ஆவரங்கால் பகுதிகளில் விழுந்ததாகவும் ஒரு சில ஷெல்கள் வெடிக்கவில்லையெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (யோ)

## பல்கலைக்கு எரிபொருள் வழங்குவதில் கெடுபிடி

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான எரிபொருள்களை வழங்குவதில் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு புதிய கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து வருகிறது.

இப் பல்கலைக் கழகத்துக்குத் தேவையான எரிபொருள்களை மடங்குக்கணக்காக மட்டுப்படுத்தியே பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு தற்போதுஅனுமதி வழங்குகிறது.

ஒரு பீப்பா பெற்றோல் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி கேட்கப்பட்டபோது 10 லீற்றர் பெற்றோல் மட்டுமே எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே போல் 13 பீப்பா டீசல் தேவையென்று அனுமதி கேட்டபோது ஒரு பீப்பா மட்டும் எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[க], [நி]

## வாந்திபேதி நோய் மீண்டும் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி நோய்க்கிலக்கானவர்களென சந்தேகிக்கப்படும் 13 பேர் நேற்று சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக வாந்திபேதி நோய்க்கிலக்கானவர்களென சந்தேகிக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையானோரே சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதேவேளை நேற்றும், நேற்றுமுன்தினமும் இந்நோய்க்கிலக்கானவர்களென சந்தேகிக்கப்படும் கணிசமான நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## கடற்படை தாக்குதலில் காயமடைந்தவர் மரணம்

(வடமராட்சி)

நாகர்கோயில் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மரணமானார்.

பருத்தித்துறை முனைப் பகுதியில் தங்கிவந்த வியாகுலசாமி (வயது 50) என்பவரே மரணமானவராவார். இவருடன் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி இறந்தவர்கள் மூன்றாக உயர்ந்துள்ளது.

இதே சமயம் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த எஸ். சுந்தரலிங்கம் (வயது 45) என்பவரும் பலியானார். (யோ)

## தெற்கு, வடமேற்கு மாகாண

# முதலமைச்சர்கள் தெரிவு முறையற்றது என தீர்ப்பு

(கொழும்பு)

தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் ஆளுநர்களால் முதலமைச்சர் நியமனம் செய்யப்பட்டிருக்கும் முறை சட்ட பூர்வமற்றதாகும் என்று மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மாகாணசபைத் தேர்தல்களின் பின்பு தென்மாகாண முதலமைச்சராக எம். எஸ். அமரசிறியும், வடமேற்கு மாகாண முதலமைச்சராக காமினி ஜயவிக்கிரம பெரேராவும் அந்தந்த மாகாண ஆளுநர்களால் நியமனம் செய்யப்பட்டமைதெரிந்ததே. இந்த நியமனங்களை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த மேல் நீதிமன்றம் சட்டப்பிரகாரம் முதலமைச்சர்களை நியமனம் செய்யும்படி ஆளுநர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதியரசர்கள் கே. பாலகிட்ணர், சரத் என். சில்வா, எஸ். குணசேகரா ஆகியோர் இம் மனுவை விசாரித்தனர்.

## இராணுவம் கெடுபிடி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைவிட்டு வெளியேறக்கூடாது என்று 4 அரச திணைக்களத் தலைவர்களுக்கும் பிரிகேடியர் றொகான் குணவர்தனா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் இவ

(4ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் [illegible] நூலகம்

## வரி விளம்பரம்


**வாங்குகிறோம்**

சுத்தமான வேப்பம் விதை, வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகிறோம். 'மில்க்வைற்' (சி.7558)

**மிருதங்கம்**

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாகச் சாதம் போட்டு தரப்படும் கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். [6241]

**விற்பனைக்கு**

புதிய சினிமாப் பாடல்கள் உள்ள கொம்பக்ற்டிக்ஸ் C.D. கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நியூ விக்ரேஸ்எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ், B M C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6243)

**லலிதா சகஸ்ர நாமம்**

லலிதா சகஸ்ரநாமம்(கிரந்த லிபி)வெளிவந்துள்ளது. சுப்பிரமண்யசகஸ்ரநாமமும் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்க. சோ. நிர்மலேஸ்வர சர்மா முருகமூர்த்தி கோவில், நவாலி. (சி/7545)

**தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு**

தென்மராட்சியில் நடந்த வன்செயல்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின்றது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 7569)

**அக்டோபரில் வியாழன், சனி மாற்றங்கள்**

12-10-93 வியாழமாற்றம், 15 10 93 சனிவக்கிரமாற்றம் எல்லா ராசிகளின் பலன்கள் ரூபா 10/-எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ் திருநெல்வேலிச் சந்தி (நூலாசிரியர் சத்தியா) (6246)

**உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள**

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ். ஸ்ரான்லி வீதி. (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம்.


# தொழிலுக்கு வித்திடுபவர்கள் ஆசிரியர்களே ஆவர்

## - அருட்திரு பிரான்சிஸ் யோசேப்

(பருத்தித்துறை)

''ஆசிரியப் பணி நிகரற்ற, தூய்மையான அதி உன்னத பணி என்பதை உலகம் நன்கு அறிந்து கொண்டமையினாலேயே இன்று உலகமெங்கும் ஆசிரியர் தினம் கொண்டாடப் படுகின்றது. ஆசிரியர்களிடமிருந்து பல்வேறு அறிவுகளைப் பெற்றுக் கொள்வதன் மூலமே தொழில் மகத்துவத்தைப் புலப்படுத்தி இந்த உலகத்திற்கே ஒளிச் சுடரை ஏற்றக் கூடிய நிலை சமுதாயத்திற்கு ஏற்படுகின்றது. மனித சமூகங்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வளமான வாழ்வுக்கும் ஆதாரமாக அமையும் கல்வியை இளம் சமுதாயத்திற்கு ஊட்டுகின்ற உன்னத பணியை மேற்கொண்டுவரும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள் என எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.''

இவ்வாறு வடமராட்சிக் கோட்ட உலக ஆசிரியர் தின விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட் திரு. பிரான்சிஸ் யோசேப் அடிகளார் குறிப்பிட்டார். இவ் ஆசிரியர் தின விழா வட இந்து மகளிர் கல்லூரியில் வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி அரசியல் நிர்வாகச் செயலாளர் திரு. பைந்தமிழன் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். இங்கு வந்திருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், இளைப்பாறிய ஆசிரியர்கள் ஆகியோர் மாணவர்களால் மாலைகள் அணிவித்தும், மலர்கள் சொரிந்தும் கௌரவிக்கப்பட்டனர். இதனையொத்து தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் உலக ஆசிரிய தினத்தையொட்டி விடுத்திருந்த வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. தொடர்ந்து உரையாற்றிய அருட் திரு. பிரான்சிஸ் யோசேப் அடிகளார் குறிப்பிட்டதாவது,

''டாக்டர் தொழிலாயினும் சரி, பொறியியலாளர் தொழிலாயினும் சரி, குருத் தொழிலாயினும் சரி, எந்தவிதமான தொழில் துறைகளுக்கும் வித்திட்டவர்கள் ஆசிரியர்களே. தொழிலுக்குரிய வேதனம் வழங்கப்பட வேண்டும். இந்நிலையிலே மகத்துவம் நிறைந்த ஆசிரியத் தொழிலுக்கு வழங்கப்படும்வேதனம் போதியதாக வழங்கப்படுவதில்லை. இதனைக் கவனத்திலெடுத்து ஆசிரியர்களுக்கான வேதனத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது மக்களின் பாரிய பொறுப்பாகும். மக்கள் குரல் கொடுக்கும் போது ஆள்பவன் செவி சாய்க்க வேண்டிய நிலை நிச்சயம் உருவாகும். ஆனால் இன்றைய நிலையிலே மக்கள் குரல்களுக்கு ஆள்பவன் செவி சாய்ப்பதில்லை என நீங்கள் கூறலாம். தமிழினத்தின் விடிவெள்ளியான தமிழீழம் மலரும் போது நிச்சயம் மக்களின் இது போன்ற குரல்களுக்குத்தீர்வுகள்காணப்படும்'' என்றார்.

யாழ். பல்கலைக் கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் த. கலாமணி ''விளக்கு'' மாத இதழின் அறிமுக உரையை நிகழ்த்தினார். பெற்றோர்கள் சார்பில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதனும், பழைய மாணவர்கள் சார்பில் கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. சிறினிவாசனும், மாணவர்கள் சார்பில் செல்வி வாசுகி சின்னையா ஆகியோருடன் விடுதலைப் புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன், வடமராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரூபன்ராஜ் ஆகியோரும் உரையாற்றினர். அதிபர் திருமதி சுந்தரலிங்கம் நன்றியுரை கூறினார். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன (25)

## ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தினவிழா கடந்தபுதன்கிழமை காலை இப்பாடசாலை தற்போது இயங்கும் வண் மேற்கு முஸ்லீம் தமிழ்க்கலவன் வித்தியாலய மண்டபத்தில், அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. செ. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டதோடு பெற்றோர் சார்பில் திரு. கனகரெத்தினம் பழைய மாணவர் சார்பில் திரு. ச. சதாசிவம் ஆகியோரின் உரைகளுடன் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் வாழ்த்துச் செய்தியும் சபையில் வாசிக்கப்பட்டது. (22)

## போர்க்காலக் கருத்தரங்கு

(தொல்புரம்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள போர்க்காலச் சூழ்நிலைகளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் கிராமங்கள் தோறும் போர்க்காலக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

சங்கானை வட்டப் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்கள், இந்து இளைஞர் மன்றங்களின் முன்றலில் நடைபெறும் இக்கருத்தரங்குகளில் போர்க்காலச் சூழலில் மக்களின் பங்களிப்பு பற்றிய கருத்துரைகளும், போர்க்கால நிகழ்வுகளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வீதி நாடகங்களும், சென்ற மாதத்திற்கான நிகழ்வுகளைக் கொண்ட ஒளிவீச்சு படக்காட்சியும் நடைபெற்று வருகின்றன.

கடந்த புதன்கிழமை மாலை தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், மூளாய் இந்து இளைஞர் மன்றம், வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலடி, இடம்பெயர்ந்தோர் முகாம்கள் ஆகியவற்றில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுகளில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டதோடு, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் கருத்துரைகளும், சிறப்புரைகளும் இடம்பெற்றன. [41]

## உணவு முத்திரை விநியோகம்

(தொல்புரம்)

இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான உலர் உணவு முத்திரைகள்வழங்கப்படுகின்றன.

செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய மேற்படி உணவுமுத்திரைகள் காரைநகர் மத்திப்பிரிவைச் சேர்ந்த இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சுழிபுரம் பிரதான வீதியிலுள்ள கிராமசேவையாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டுவருவதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் காரியாலய நேரத்தில்முத்திரைகளைபெற்றுக் கொள்ளுமாறும் காரைநகர் மத்தி கிராமசேவையாளர் திரு எஸ் கே. சிவலிங்கம் (யே 48) தெரிவித்துள்ளார். (41)

## விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களிற்கு சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை யாழ். செயலகம் வழங்க முடிவு செய்துள்ளதாகப் பதில் அரச அதிபர்தெரிவித்தார்.

இவ்விளையாட்டு உபகரணங்களை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் சகல உதவி அரச அதிபர்களூடாக விளையாட்டுக் கழகங்களிற்கு வழங்கவுள்ளார்.

மேற்படி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ். செயலகத்திற்கு எடுத்துவரப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## கெற்பலி பாடசாலைகள் திங்களன்று ஆரம்பம்

(நல்லூர்)

இடம்பெயர்ந்து இயங்கி வந்த கெற்பலி பண்டிதர் குடியிருப்பு புங்குடுதீவு ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் மீண்டும் திங்கட்கிழமை அதே இடத்தில் ஆரம்பமாக உள்ளதாக இதன் அதிபர் திரு. செ. சண்முகவடிவு அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் இப்பாடசாலை மாணவ மாணவிகளுக்கு மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட உள்ளதாகவும் ஆசிரியர்கள், மாணவர்கள் தவறாது சமுகம் அளிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (17)


**யாழ். பல்கலைக்கழக**

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| கலைமாணி | பகுதி I | B.A. | PART I |
| ,, | பகுதி II | ,, | ,, II |
| வணிகமாணி | பகுதி I | B. COM. | PART I |
| ,, | ,, II | ,, | ,, II |

**விரிவுரைகள் 10. 10. 1993-ல் ஆரம்பமாகின்றன.**

குறிப்பு: எக்காரணம் கொண்டும் விரிவுரைகளுக்கு ஆரம்பத்திலிருந்து சமுகமளிக்கத் தவறும் மாணவர்களுக்கு பின்னர் அனுமதி வழங்கப் படமாட்டாது.

வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ்நகரில் இதுவே.

கடந்த 15 வருட காலமாக அநேக பட்டதாரிகளை உருவாக்கிய நிறுவனம்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1 ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்

(சி-7567)


## உள்வாரி மாணவர்களாக இணைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு தெரிவான மாணவர்கள் பல்கலைக் கழக விவசாயபீட உள்வாரி மாணவர்களாக விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிப்பது ... உணர்ச்சியோடு சேவை புரிகின்றதொடர்ந்துசேவை புரிய இருக்கின்ற உத்தியோகத்தர்கள் உயர்கல்வி கற்பதற்கு தடையாக இருப்பது மிகவும் வேதனை அளிப்பதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்கள உத்...


**O/L Dec. 93**

**PAPER CLASS**

**ஆரம்பம்: 09.10.93**

**சனி காலை 9. 00 மணி**

(சகல பாடங்களும்)


## கணிதபாட செயலமர்வு

யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தால் நடாத்தப்பட்ட விசேட செயலமர்வுகளில் இதுவரை கலந்து கொண்ட சகல கணித ஆசிரியர்களுக்குமான இறுதி நாள் செயலமர்வு எதிர்வரும்திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-09

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் கைதடி, வண்ணாத்திபாலத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த ...

றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 7569)

## அக்டோபரில் வியாழன், சனி மாற்றங்கள்

12-10-93 வியாழமாற்றம், 15 10 93 சனிவக்கிரமாற்றம் எல்லா ராசிகளின் பலன்கள் ரூபா 10/-எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ் திருநெல்வேலிச் சந்தி (நூலாசிரியர் சத்தியா) (6246)

## உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தர வாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ். ஸ்ரான்லி வீதி. (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை-கண்டி வீதி சாவகச்சேரி. (சி/7570)

## தவறிவிட்டது

6.10.93 அன்று யாழ். வளாகத்திலிருந்து உரும்பராய் வரையுள்ள இடத்தில் கைச் சங்கிலி (பவுண்) ஒன்று தவறி விட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6248)

## பல்கலை. மாணவருக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் பெறத் தவறிய மாணவர்கள் எதிர்வரும் செவ்வாயன்று காலையில் அல்லது பிற்பகலில் சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு நிதிக்கிளையில் பணத்தை செலுத்துவதன் மூலம் பிற்பகலில் களஞ்சியத்திலிருந்து மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய் விலை வீழ்ச்சி

மண்ணெண்ணெய் விலையில் நேற்றுமுன்தினம் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

கடந்த 28ஆம் திகதிகிளாலி இறங்குதுறையை நோக்கி ராணுவ நகர்வைத் தொடர்ந்து லீற்றர் 150ரூபா வரை உயர்ந்த மண்ணெண்ணெய் விலை படையினர் திரும்பிச் சென்றதை அடுத்து குறைந்து வருவது தெரிந்ததே.

அதே வேளை திருநெல்வேலிச் சந்தையில் மண்ணெண்ணெய் லீற்றர் 90 ரூபாவாக விலை குறைக்கப்பட்டு விற்பனையானது (21)

வாகச் செயலாளர் திரு. பைந்தமிழன் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். இங்கு வந்திருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், இளைப்பாறிய ஆசிரியர்கள் ஆகியோர் மாணவர்களால் மாலைகள் அணிவித்தும், மலர்கள் சொரிந்தும்

ளர் த. கலாமணி ''விளக்கு'' மாதஇதழின் அறிமுகஉரையை நிகழ்த்தினார். பெற்றோர்கள் சார்பில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதனும், பழைய மாணவர்கள் சார்பில் கரவெட்டி பிரதேச

ய ளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டுவருவதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் காரியாலய நேரத்தில்முந்திரைகளைபெற்றுக் கொள்ளுமாறும் கரவை நகர் மத்தி கிராமசேவையாளர் திரு எஸ் கே. சிவலிங்கம் (பே 48) தெரிவித்துள்ளார். (41)

றில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுகளில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டதோடு, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் கருத்துரைகளும், சிறப்புரைகளும் இடம்பெற்றன. [41]

விவசாய போதனாசிரியர்களை

## உள்வாரி மாணவர்களாக இணைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு தெரிவான மாணவர்கள் பல்கலைக்கழக விவசாயபீட உள்வாரி மாணவர்களாக விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிப்பது தொடர்பாக வடக்குக்கிழக்குமாகாண விவசாய போதனாசிரியர்கள் ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது.

இது விடயம் சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தருக்கு மேற்படி ஒன்றியத்தால் அனுப்பப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் மேலும் வட பகுதியில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் கடமை உணர்ச்சியோடு சேவை புரிகின்றதொடர்ந்துசேவை புரிய இருக்கின்ற உத்தியோகத்தர்கள் உயர்கல்வி கற்பதற்கு தடையாக இருப்பது மிகவும் வேதனை அளிப்பதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பேராதனை, ருகுணு மற்றும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்களில் பெற்று வருகின்ற அதே உரிமையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் வழங்க வேண்டுமெனவும் இதற்காக சம்பந்தப்பட்ட புத்திஜீவிகள் அனைவரும் உதவியும் ஒத்தாசையும் நல்க வேண்டுமெனவும் மேற்படி ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜே. வி. பி. அழிப்பின் போது

## காணாமல் போனோர் குறித்து ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் வெளிநாட்டு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் செய்தியாளருக்கு தெரிவித்துள்ளார்.

இக்குழு 1991-ம் ஆண்டுக்கு முன்னர் ஜே. வி.பி அழிப்பின் போது காணாமல் போனவர்களை மட்டும் ஆராயும் என்றும், இது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக தெளிவான கருத்து ஒன்றை பெறும் பொருட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இக்குழு இயங்கும் என்றும் காணாமல் போனவர்களின் பெயர்விபரமும், தற்போது தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்படும் என்றும் இராணுவ நடவடிக்கையின் போது எவ்வளவு எண்ணிக்கையானவர்கள் காணாமல் போனதாக கூறமுடியாது என்றும், தற்போது 35 ஆயிரத்துக்கு மேல் காணாமல் போனதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் பிரட்மன் வீரகோன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெளிநாட்டு பாராளுமன்ற உறுப்பினர் தயாரித்த அறிக்கையின் படி 1991 ஜே. விபிக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில்60 ஆயிரத்து மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கேசன்துறைக் கிளை வாடிக்கையாளர்களுக்கு

[யாழ்ப்பாணம்]

மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளை வாடிக்கையாளர்கள் இடம்பெயர்ந்திருந்தால் அவர்கள் தங்கள் தற்போதைய தற்காலிக முகவரியை வங்கிக்கு உடனடியாக அறியத் தரும்படி வங்கியின் கிளை முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்விபரம் கொடுக்கப்படும் வரை வாடிக்கையாளர்களின் மாதாந்த வங்கிக் கூற்றுக்கள் அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


**O/L Dec. 93**

**PAPER CLASS**

ஆரம்பம்: 09.10.93

சனி காலை 9. 00 மணி

(சகல பாடங்களும்)

**நாவலர் கல்விக் கழகம்**

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(6244)


## கணிதபாட செயலமர்வு

யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தால் நடாத்தப்பட்ட விசேட செயலமர்வுகளில் இதுவரை கலந்து கொண்ட சகல கணித ஆசிரியர்களுக்குமான இறுதி நாள் செயலமர்வு எதிர்வரும்திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. இப் பயிற்சி நெறியில் முழுமையாகக் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கான தகைமைச்சான்றிதழ்கள் அன்றைய தினம் பிரதேச கல்விப்பணிப்பாளரினால் வழங்கப்படவுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## அறிவித்தல்

**1991-ம் ஆண்டு ஜி. சி. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை**

மேற்படி பரீட்சையில் பாதிப்படைந்த பொறியியல் துறை தவிர்ந்த ஏனைய துறை மாணவர்கள் சார்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்று இம்மாணவர்கள் சார்பில் இவ் வழக்கினை தாக்கல் செய்ய விரும்பும் மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் தயவு செய்து இணைப்பாளருடன் கீழ்க்காணும் முகவரியில் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்,

இணைப்பாளர்
நடவடிக்கைக் குழு

பழைய மாணவர் சங்கம், யாழ். இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம். (சி-7571)


**யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு**

கலைமாணி பகுதி I — B.A Part I 12-1மணி

கலைமாணி பகுதி II — B.A Part II 10-11மணி

**அரசியல் விஞ்ஞானம்**

விரிவுரையாளர் திரு. க. செல்வரட்ணம்
B.A. (Hons)

**ஆரம்பம் 10-10-93**

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 7566)



மாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம்
யாழ்நகரில் இதுவே.

கடந்த 15 வருட காலமாக அநேக பட்டதாரிகளை உருவாக்கிய நிறுவனம்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1 ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்

(சி-7567)


## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-09

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் கைதடி, வண்ணாத்திபாலத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2 ம் லெப் சிவா** (குப்புச்சாமி சிவசிறீதரன் - கைதடி, சாவகச்சேரி - யாழ்)

மட்டுநகரில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவன்.

1989ஆம் ஆண்டு பளையில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு திருமலை - வேப்பங்குளம் 10-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சங்கர்** (நா. மோகனசுந்தரம்- அன்புவழிபுரம்-திருமலை)

மூல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**லோகநாதன்** (கந்தையா பார்த்தீபன் - நிலாவெளி-கபறனை)

**கோகிலன்** (பொன்னையா கனகலிங்கம் - டி- 03, பன்னங்கண்டி, பரந்தன் - கிளிநொச்சி)

கடவானையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**ரம்மி** (நடராசா குலேந்திரராசா - 234, 2-ம்படிவம், கந்தளாய் - திருமலை)

**அஜித்** (கணபதிப்பிள்ளை கருணாகரன் - 3 ம்வட்டாரம், ஈச்சந்தீவு, ஆலங்கேணி - திருமலை)

**றொபின்சன்** (கனகசுந்தரம் குகன் - மணற்சேனை - திருமலை)

மட்டு - வெல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**சர்வா** (பாலசிங்கம் திருக்குமாரராசா- வன்னேரிக்குளம்)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப் தரன்** (காராளசிங்கம் ஈஸ்வரன் - நெடுங்கேணி - மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ்ப்பெண்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய-

**2 ம லெப். கிளி** (மார்கண்டு தேவராசா - கன்னியா - திருமலை)

மட்டு - வாழைச்சேனைப் பகுதியிலுள்ள கடையில் பார்சல் குண்டு வெடித்ததில் பலியான ஒரு தமிழ்மகன்.

1992ஆம் ஆண்டு இதேதினம் மணலாற்றில் தவறுதலான வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**தினகரன்** (சிந்தாமணி அம்பிகைபாலன் - கோணாவில் - கிளிநொச்சி)

ஆகியோரை இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7568]

சிந்தனைக்கு

நாடுகள் இடையே இன நோக்கிலும், தேசிய நோக்கிலும் குறிக்கோள்களிலும் வேறுபாடுகள் உண்டு என்பது உண்மையே.

-ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 09-10 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## மேற்குலக மாயை

ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் யூத மக்களில் 60 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு அன்று இழைக்கப்பட்ட கொடுமையானது தமக்கென ஒரு தனியரசு இன்றி உலகில் வாழ முடியாது, வாழுவதில் பயனில்லை என்பதையும் யூதர்களுக்கு உணர்த்தியது.

ஆனால், யூத மக்களுக்கு தனியாக ஜெர்மனியில் மட்டும் இன்னல்கள் இழைக்கப்படவில்லை. ஜெர்மனியில் இடம்பெற முன்னரே ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் யூதர்களுக்கு எதிராக இன்னல்கள் இழைக்கப்பட்டன. இந்தவகையில், ஜெர்மனி மட்டும்தான் இனவெறி உள்ள நாடு என்பதல்ல. ஜெர்மனியில் ஹிட்லர் காலத்தில் அதிகம் என்பதே உண்மையாகும்.

இந்த நிலை அன்று மட்டுமல்ல, இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அமெரிக்காவில், கறுப்பர்களுக்கெதிரான உணர்வு வெள்ளை ஆங்கிலேயரிடம் உள்ளது. கனடாவிலும், இன்று வெளியாருக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெறத் தொடங்கி விட்டன.

இங்கிலாந்து, காலனியாதிக்கத்தின் மூலம் உலக வளங்களை எல்லாம் சுருட்டிக் கொண்டபோது, அதை ஆதரித்த ஆங்கிலேயரால், இன்று அந்நாடுகளில் இருந்து செல்பவர்களை அரவணைக்க முடியவில்லை. கறுப்பர்களுக்கும், ஆசியர்களுக்கும் எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கியுள்ளனர்,

இதேபோன்று, ஜெர்மனியில் மீண்டும் நாசிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இன்று நாசிகள் தனியாக அந்நிய நாட்டவர்களை மட்டுமல்ல, அந்நிய நாட்டவருடன் தொடர்புடைய ஜெர்மனியர் மீதும் தாக்குதல் தொடுக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த மாதம் இலங்கையைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருத்தியை கொலை செய்த ஜெர்மனிய நவநாசிகள் இதை அடுத்து மண்டைதீவைச் சேர்ந்த ஒருவரையும், அவரது ஜெர்மனிய மனைவியையும், இரு குழந்தைகளையும் கொன்றுள்ளனர்.

இக்கொலையானது, ஹிட்லரின் தூய்மைக் கோட்பாட்டின் பாற்பட்டது என்றே எண்ண வைக்கின்றது, அதாவது, ஜெர்மனியரைத் தவிர வேறு எந்த இனமும்

# அரியாலை குடியிருப்பில் கொலரா 4பேர் மருத்துவமனையில் அனுமதி

(அரியாலை)

தீவக இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புக்களில் ஒன்றான அரியாலை சாம்சன் குடியிருப்பில் இருந்த பி. சவிரி ஆச்சி (வயது 70) என்பவர் கடுமையான வயிற்றோட்டம் காரணமாக நேற்று காலை அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் நடராசா (வயது 80), நவசா (வயது 04), சாள்ஸ் (வயது 30), செல்வநாயகி (வயது32) ஆகியோரும் கடந்த புதன் சிறிரஞ்சனி (வயது 08) மாதம், அமிர்தவாசன் (வயது 70) ஆகியோரும் இதே நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

யாழ். சுகாதாரப் பகுதியினர் இம் முகாமில் முழுமையான செயல்பாட்டை செய்து கொண்டிருக்கின்றனர். எனினும் இந்நோய் கட்டுப்பட்டதாக தெரியவில்லை.

மழைக்காலம் ஆரம்பித்திருக்கும் இவ் வேளையில், இம் முகாம் கொட்டில்கள் சரியான கவனிப்பின்மையால் வெள்ளம் தேங்கி இருக்கக் காணப்படுகிறது.

இம் முகாமைச் சேர்ந்த திருமதி இந்திரகுமாரி அவர்களின் கூற்றுப்படி இம் முகாம் கொட்டில்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியவை. ஆனால் இதன் பராமரிப்பை ஏற்றிருப்போரின் கவலையீனத்தால் நாம் அவஸ்தைப்பட வேண்டியிருக்கின்றது எனக் கூறினார்

## வாந்திபேதிநோயின்தாக்கம் வெகுவாக குறைந்து விட்டது

### சுகாதார வைத்திய அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை பிரதேசத்தில் கொலரா என்னும் வாந்திபேதி நோய் கட்டுப்பாட்டிற்குள்கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், இந்நோயின் தாக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க தற்பொழுது வெகுவாகக் குறைந்து காணப்படுவதாகவும், மாநகராட்சி மன்றத்தின் சுகாதார வைத்திய அதிகாரி விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அச்செய்திக் குறிப்பில், இந்நோய் முதலில் கடந்த மாதம் 14ஆம் திகதி இனம் காணப்பட்டபோதும், கடந்த வியாழக்கிழமை வரையில்எழுபத்து மூன்று நோயாளர்களுக்கு வயிற்றோட்டம் காணப்பட்டதாகவும் இதில் 35பேருக்கு கொலராவாக இருக்கலாம் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டபோதும் ஐந்து பேர் மட்டுமே கொலரா நோயாளிகள் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டதாகவும், எவருக்கும் உயிராபத்து நேரிடவில்லைஎன்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தனிநபர் சுத்தம் பேணுவதும், பாதுகாப்பான குடிநீரை அருந்துவதிலும், மலசல கூடபாவிப்பில் சுகாதாரத்தை கடைப்பிடிப்பதிலும் தேவையற்ற ஒன்றுகூடல்களை தவிர்ப்பதிலும் பொது மக்கள் குறிப்பாக கரையோரப்பகுதிமக்கள் மேலும் ஆர்வம் காட்ட வேண்டும்என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசேட கூட்டம்

புதிய பிரதேசக் கல்விச் செயலகங்களின் செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடுவதற்கான கூட்டம் ஒன்று யாழ் கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 1.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் கடமைபுரியும் துறை சார்ந்த உதவி / பிரதி கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும், கோட்டப் பணிமனைகளில் இணைக்கப்பட்டுள்ள அதிபர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## இன்றுடன் முடிவுறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களம் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடந்தமாதம் 27ஆம் திகதிவரை நடைபெற்றுவந்த சிற்றூழியர்களை ஆட்சேர்ப்பதற்கானநேர்முகப் பரீட்சைகள்யாவும் இன்றுடன் முடிவடைகின்றன என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இன்று, இதுவரை நேர்முகப் பரீட்சைகளுக்கு சமுகமளிக்காதவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். [பா]

## திருட்டு, மோசடி அதிகரிப்பு

(குருநகர்)

யாழ்-நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து களவு மற்றும் ஏமாற்றிப் பணம் பறித்தல் சம்பவங்கள் நடைபெற்று வருவதாக அறியப் படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு வாழைக்குலை கட்டி நின்ற சைக்கிளில் இருந்து வாழைக்குலையை இறக்கி விட்டு சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் ஒரு வீட்டில் நடைபெற்றுள்ளது.

அதே போன்று ஒரு வீட்டுக்கு வந்த நபரொருவர் நன்கு பழக்கப்பட்டவர்போல பெண்களிடம் கதைத்துவிட்டு வீட்டுக்காரரர் விறகு விலை பேசித் தீர்த்துவிட்டு நிற்கிறார் 500 ரூபா வாங்கி வரும்படி கூறி அனுப்பினார் என தெரிவித்தாராம்.

அதை நம்பிய வீட்டுப்பெண் 500 ரூபா இல்லை 1000 ரூபா தாள்தான் இருக்கிறது எனக் கூறி மாற்றி எடுக்கும்படி கொடுத்ததும் 1000 ரூபாவுடன் மேற்படி நபர் மறைந்து விட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## இவன் யார்? எங்களைக் கொடுமைப்படுத்த

அன்பின் தம்பி தங்கைகளுக்கு,

வீடு எரிகிறது! சிறு கொட்டில்கள் எரிகின்றன! கடைகள் எரிகின்றன! வேலிகள் எரிகின்றன! தீயிலே பொசுங்கி பொருள்கள் எரிகின்றன! நிறுத்தப்பட்ட படகுகள் நூற்றுக்கணக்கில் எரிகின்றன!

இவை மட்டுமா?

சிறு கொட்டிலாயிருந்த பிள்ளையார் கோயிலும் சாம்பராய்க் கிடக்கிறது! கிறிஸ்தவ ஆலயங்களும் சேதமாய் விட்ட காட்சியே!

இவை சிங்கள அரச படையின் சாதனைகள்! விமானங்கள் குண்டு பொழிய, எறிகணை வீச்சுக்கள் ஆயிரக்கணக்கில் அழிவு செய்ய, கூலிப்படைகள் எண்ணிக்கையில் இருபதினாயிரம் என வந்து குவிய - இந்தப் பேயாட்டத்தின் பின்னரும் தரித்து நிற்க முடியாது பின்னடைந்த சிங்களப் படையினர் கிளாலிப் பகுதியில் விட்டுச் சென்றுள்ள சாதனைச் சின்னங்களே இவை!

உயிரற்ற பொருள்கள் மீதும் இவ்வளவு ஆவேசமாம்!

எனினும் தரித்து நிற்க முடியாது அவர்களது நெஞ்சம் பேதலித்தது! எனவே அழித்த இடத்தை விட்டுப் பின்னேறினர்.

ஏன்?

எண்ணாத எதிர்ப்பு;

எந்த இடர் நடுவேயும் எம் விடுதலைப் போராளிகளின் பதிலடி!

படையினருள் பெருந்தொகை உயிரிழப்பு. கவசவண்டிகள் உட்பட பெரும் ஆயுத இழப்பு!

இந்த இழப்பு நிலையே அவர்களை அங்கு தரித்து நிற்காது பின்வாங்கச் செய்தது!

இது முடிவல்ல என்பது எங்களுக்குத் தெரியும்!

எனினும் இவ்வித கசப்பான நினைவுகளும் தோல்விகளும் பின்வாங்கல்களும் சிங்களப் படையினருக்கு நிரம்பஉண்டு!

''யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியில் சண்டை நடைபெறுகிறது!'' ''யாழ். கச்சேரியை நோக்கி அரசபடை முன்னேறுகிறது''!

-இவ்விதம் அன்றைய அமைச்சர் ரஞ்சன் கூறிக்கொண்டிருந்தார்! பகிரங்கமாக அவர்கொக்கரித்துக்கொண்டிருந்தார்!

ஆனால் நடந்ததா அவை?

யாழ். கோட்டையின் உள்ளே அடைபட்ட படையினர் மூன்று மாதம் அங்கேயே அடக்குண்டு கிடந்தனர்!

இரண்டு தடவை அகோர முயற்சிகள் நடந்தன! வானூர்திகள் இறங்க முயன்று எம் எதிர்ப்புக்கு இலக்காகி மேலெழுந்து பறந்து மறைந்தன!

பலாலி எறிகணைகளும் விமானத் தாக்குதல்களும் பலனளிக்கவில்லை! இரண்டாவது முறை மீட்க வந்த படையினரின் ஒரு பகுதி பலியாகினர்! இன்னொருபகுதிகோட்டையின் உள்ளேஓடி ஒழிந்து முடமாகினர். ஏனையோர்திரும்பிஓடினர்.

மூன்றாவது முறை மண்டைதீவுப் படையுடன் சேர்ந்து இங்கிருந்தோரும் 'தப்பினோம் பிழைத்தோம்' என ஓடியதே கதையாயிற்று.

யாழ்ப்பாணத்தை முற்றாகப் பிடிக்க வந்த படை இது.

ஏன் ஓடினர்?

எங்கள் போர் வலிபுகட்டிய பாடம் இது! மூன்று மாத இடையறாப் போர் முயற்சி! எம் மாமணிகள் 107 பேரின் வீரச்சாவு! எத்தனையோ இன்னல்கள், படுகாயங்கள் இழப்புகள்!

மாங்குள முகாமில் எதிரி இருப்பில் இருந்த போது நடாத்திய அட்டூழியம் கொஞ்சமா? எவ்விதம் அவன் மறைந்து ஒழிந்தான்?

மணலாற்றில் இவ்வளவு பாரிய தாக்குதலின் பின்னும் பகைவன் தன் எல்லைக்குள் நின்று கொண்டிருப்பது எதனால்?

# கூட்டரசாங்கம் அமைக்க

தாக்குதல்கள் இடம்பெறத் தொடங்கி விட்டன.

இங்கிலாந்து, காலனியாதிக்கத்தின் மூலம் உலக வளங்களை எல்லாம் சுருட்டிக் கொண்டபோது, அதை ஆதரித்த ஆங்கிலேயரால், இன்று அந்நாடுகளில் இருந்து செல்பவர்களை அரவணைக்க முடியவில்லை. கறுப்பர்களுக்கும், ஆசியர்களுக்கும் எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கியுள்ளனர்,

இதேபோன்று, ஜெர்மனியில் மீண்டும் நாசிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இன்று நாசிகள் தனியாக அந்நிய நாட்டவர்களை மட்டுமல்ல, அந்நிய நாட்டவருடன் தொடர்புடைய ஜெர்மனியர் மீதும் தாக்குதல் தொடுக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த மாதம் இலங்கையைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருத்தியை கொலை செய்த ஜெர்மனிய நவநாசிகள் இதை அடுத்து மண்டைதீவைச் சேர்ந்த ஒருவரையும், அவரது ஜெர்மனிய மனைவியையும், இரு குழந்தைகளையும் கொன்றுள்ளனர்.

இக்கொலையானது, ஹிட்லரின் தூய்மைக் கோட்பாட்டின் பாற்பட்டது என்றே எண்ண வைக்கின்றது, அதாவது, ஜெர்மனியரைத் தவிர வேறு எந்த இனமும் தூய்மை அற்றது என்பது மட்டுமல்ல, ஜெர்மனியர் அல்லாதவர்களுடன் தொடர்பு வைப்பவர்களும் தூய்மை அற்றவர்கள் என்ற நிலைப்பாடேயாகும்.

இதேவேளை உலகில், அமைதிக்குப் பெயர் பெற்ற சுவிட்சர்லாந்திலும், உலகத்தவர்களைக் கவர்ந்திழுக்கும் பிரான்சிலும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக ஆங்காங்கே தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையானது, தனியாக மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமல்ல, முதலாம் உலக நாடுகளில் கூட இனவெறியும், இன வன்முறையும் காணப்படுவதன் வெளிப்பாடாகும். ஆனால், அளவிலும், பருமனிலும் அவை வேறுபடுகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலை நிலவுகின்ற போதும் பெரும் எண்ணிக்கையில், ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கைத் தமிழ் மக்கள் படை எடுத்துச் சென்றவண்ணம் உள்ளனர், அந்நாடுகளில் உள்ள இனவாத சிந்தனை பற்றியோ, அன்றி அந்நியர்களுக்கு குறிப்பாகக் கறுப்பர்களுக்கும், ஆசியர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் தீங்குகள் பற்றியோ அவர்கள் அக்கறை காட்டுவதாக இல்லை.

ஆனால், இன்றைய தனித்தனிச் சம்பவங்கள், ஒட்டுமொத்தமான சம்பவங்களாக, அந்நியர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் போதுதான் தாயகத்தின் மகிமையைப் புரிந்து கொள்ள அவர்களால் முடியும். ஆனால், மேற்குலக நாடுகளில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது. சட்டத்தின் முன் சகலரும் சமம் என எண்ணிக் கொண்டும் பலர் உள்ளனர்.

ஆனால், இது எந்தளவிற்கு நெருக்கடி நிலை ஒன்றில் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதே ஆகும். பொஸ்னியாவைத் தாயகமாகக் கொண்டுள்ள போதும், முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக சேபியர்களின் தாக்குதலில் இருந்து அவர்களைக் காக்க மறுக்கும் மேற்குலகம், எவ்வாறு மூன்றாம் உலகில் இருந்து சென்ற கறுப்பர்களையும், ஆசியர்களையும் பாதுகாக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்,

ஆனால், இதனை அனுபவப்படாமல் எவரும் ஏற்க மாட்டார்கள்போல் தெரிகின்றது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதுபோல் மேற்குலகம் குறித்து அவர்களின் கற்பனை உள்ளது. இதனால், பாதுகாப்பு, சுதந்திரம் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை- ஆனால் இவை பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டிய சூழ்நிலை விரைவில் வந்துவிடும் என்றே எண்ண வைக்கிறது. இதை அவர்கள் அசட்டை செய்வார்களே ஆனால், பெரும் இன்னல்களை எதிர்காலத்தில் அனுபவிக்க வேண்டி வருவது தவிர்க்க முடியாதது.

---

ஒன்று யாழ் கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 1.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் கடமைபுரியும் துறை சார்ந்த உதவி / பிரதி கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும், கோட்டப் பணிமனைகளில் இணைக்கப்பட்டுள்ள அதிபர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யாழ். கல்வித் திணைக்களம் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடந்தமாதம் 27ஆம் திகதிவரை நடைபெற்றுவந்த சிற்றூழியர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள்யாவும் இன்றுடன் முடிவடைகின்றன என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இன்று, இதுவரை நேர்முகப் பரீட்சைகளுக்கு சமுகமளிக்காதவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். [பா]

பெற்றுள்ளது.

அதே போன்று ஒரு வீட்டுக்கு வந்த நபரொருவர் நன்கு பழக்கப்பட்டவர்போல பெண்களிடம் கதைத்துவிட்டு வீட்டுக்காரர் விறகு விலை பேசித் தீர்த்துவிட்டு நிற்கிறார் 500 ரூபா வாங்கி வரும்படி கூறி அனுப்பினார் என தெரிவித்தாராம்.

அதை நம்பிய வீட்டுப்பெண் 500 ரூபா இல்லை 1000 ரூபா தாள்தான் இருக்கிறது எனக் கூறி மாற்றி எடுக்கும்படி கொடுத்ததும் 1000 ரூபாவுடன் மேற்படி நபர் மறைந்து விட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

---

# கூட்டரசாங்கம் அமைக்க கட்சிகள் பெரும் முயற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போயிருப்பதைத் தொடர்ந்து ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் திருமதி பெனாசீர்பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

217 உறுப்பினர்களைக் கொண்ட பாகிஸ்தானிய பாராளுமன்றத்திற்காக நடந்த தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு 86 இடங்களும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கிற்கு 72 இடங்களும் கிடைத்துள்ளன.

சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சை உறுப்பினர்களின் ஆதரவோடு தமது கட்சி ஆட்சியை அமைக்கும் என்று முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப் நம்பிக்கை தெரிவித்துள்ள போதும் கூட, கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து திருமதி பெனாசீர் பூட்டோ கருத்து எதையும் வெளியிடவில்லை.

பிரதமருக்கான தெரிவு பாராளுமன்றத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது அத்துடன் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு மாகாணங்களுக்கான சட்டப் பேரவைத் தேர்தல்கள் இன்று நடைபெறவுள்ளன.

## பிரதமரைச் சந்தித்து தமிழக ஆளுநர் பேச்சு

(சென்னை)

புதுடில்லி சென்றிருக்கும் தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி நேற்று முன்தினம் பிரதமர் பீ. வி. நரசிம்மராவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார் இச் சந்திப்பு சுமார் ஒன்றரைமணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது என்றும், இப் பேச்சுவார்த்தைகளின்போது தமிழக அரசியல் நிலவரம் மற்றும் நிர்வாகம் என்பன குறித்து ஆராயப் பட்டது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், ஆளுநர் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவையும் சந்தித்துப் பேச ஆளுநர் திட்டமிட்டுள்ளார்.

## மூன்றாவது அணியுடன் கூட்டு காங்கிரஸ் ஆலோசனை

### வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

எதிர்வரும் தேர்தல்களில் தி.மு.கவுடனோ அ.தி.மு.கவுடனோ காங்கிரஸ் எந்நிலையிலும் கூட்டுவைக்காது என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

மூன்றாவது அணியொன்றுடன் கூட்டணி வைத்துக் கொள்வதற்கான சாத்தியங்கள் குறித்து காங்கிரஸ் ஆராய்வதாகவும் அவர் தெரிவித்தார். தி.மு.க. தலைவர் மு. கருணாநிதிக்கு விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய அரசு மாநில அரசுக்கு கடிதம் எழுதியதற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தி.மு.க வில் தற்போது நடப்பவை உட்கட்சி விவகாரம் என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

## 15 கோடி ரூபா செலவில் சென்னையில் திரைப்பட நகரம்

சென்னையில் பதினைந்து கோடி ரூபா செலவில் அனைத்து வசதிகளோடும் தயார் செய்யப்பட்டு வரும் திரைப்பட நகரத்தை முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் பார்வையிட்டார். வருவாய்த் துறை, போக்குவரத்துதுறை, தொழில்துறை மற்றும் செய்தி விளம்பரத்துறை அமைச்சர்களோடு இந்த நகரத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்ட அவர் குறைபாடுகளை களையவும், பணிகள் சிறப்பாக அமையவும் ஆலோசனைகளும் வழங்கினார்.

## மிக் விமானங்களின் இயங்கு திறன் விரிவு படுத்தப்படும்

மிக்21 ரகபோர் விமானங்களின் இயங்கும் திறனை இந்தியா மேலும் விரிவுபடுத்தும் என்று இந்திய விமானப் படைத்தலைவர் எஸ்.கே. கவுல் கூறியுள்ளார். இந்திய விமானப் படையின் 61-வது ஆண்டு விழாவை முன்னிட்டு செய்தியாளர்களிடம் பேசிய கவுல் மேலும் கூறுகையில் நீண்டகாலமாகப்பாவனையில் இருக்கும் விமானங்கள் பற்றி நுட்பஆய்வுமேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்குறிப்பிட்டார்

---

வானூர்திகள் இறங்க முயன்று எம் எதிர்ப்புக்கு இலக்காகி மேலெழுந்து பறந்து மறைந்தன!

பலாலி எறிகணைகளும் விமானத் தாக்குதல்களும் பலனளிக்கவில்லை! இரண்டாவது முறை மீட்க வந்த படையினரின் ஒரு பகுதி பலியாகினர்! இன்னொருபகுதிகோட்டையின் உள்ளேஓடி ஒழிந்து முடமாகினர்.ஏனையோர்திரும்பிஓடினர்.

மூன்றாவது முறை மண்டைதீவுப் படையுடன் சேர்ந்து இங்கிருந்தோரும் 'தப்பினோம் பிழைத்தோம்' என ஓடியதே கதையாயிற்று.

யாழ்ப்பாணத்தை முற்றாகப் பிடிக்க வந்த படை இது. ஏன் ஓடினர்?

எங்கள் போர் வலி புகட்டிய பாடம் இது!மூன்று மாத இடையறாப் போர் முயற்சி!எம் மாமணிகள் 107 பேரின் வீரச்சாவு! எத்தனையோ இன்னல்கள், படுகாயங்கள் இழப்புகள்!

மாங்குள முகாமில் எதிரி இருப்பில் இருந்த போது நடாத்திய அட்டூழியம் கொஞ்சமா? எவ்விதம் அவன் மறைந்து ஒழிந்தான்?

மணலாற்றில் இவ்வளவு பாரிய தாக்குதலின் பின்னும் பகைவன் தன் எல்லைக்குள் நின்று கொண்டிருப்பது எதனால்?

கிளாலியில் நடாத்திய பேயாட்டப் பேரிழப்பையடுத்து அவன் இன்று பின்னடைந்திருப்பது எதனால்? அவனைப் பலமுறை சிந்திக்க வைப்பதும் பேதலிக்க வைப்பதும் எது?

அவன் எண்ணாதஎதிர்ப்பும் பதிலடியும் அவன் உள்ளாக வேண்டி வரும் இழப்பும் இறப்புமல்லாது வேறெதுவுமல்ல!

இன்னும் சுருங்கச் சொல்லின் எங்கள் ஆயுதப்போர்! எங்கள் விடுதலைப் போராளிகளின் தீரம், தியாகம், தற்கொடை!

இவையே எம் மண்ணைக் காத்து நிற்கிறது!

ஏங்கவைக்கும் இழப்பும் எண்ணாத பதிலடியும் விழும் போது தான் எதிரி தயங்குகிறான். தன் எல்லைக்குள் பின்னடைவு செய்கிறான்!

அவன் அஞ்சுவது தன் இழப்புக்கே!

இதற்குத் தொடர்ந்து வேண்டுவது எமது ஆயுதப் போராட்டமேயல்லாது வேறெதுவும் அல்ல!

எமக்கென நாம் வாழ்ந்த இந்த மண் எமக்கே உரியது! அவன் யார்?

எங்கள் தென்தமிழீழத்தை ஆக்கிரமிக்கவும், வடக்கை கைப்பற்றி அழிக்க நினைக்கவும் அவன் யார்?

எமக்கு ஒரு வரலாறு உண்டு! கடாரம் வென்றதும்' அத்திலாந்திப் பெருங்கடலைக் கடந்ததும் எம் வரலாறு! ஆனால் வேண்டாத குழுவினராய் படகினில் ஏற்றப்பட்டு இங்கு இலங்கையில் கரை சேர்ந்ததே இவனது வரலாறு!

இந்த 'இவன்' யார் எங்களைக் கொடுமைப்படுத்த? இந்த வரலாற்று மண்ணைப் பறித்து தமிழினத்தை அழிக்க, இவன் யார்?

ஆனால் இந்த மனப்பால் குடிப்பிற்கு உரிய அவனது காரணம் தனது ஆள் எண்ணிக்கை போலும்!

அன்பான தம்பி தங்கைகளே, இவனை விரட்ட வல்லதும் எம்மை நாம் ஆள்விக்க வல்லதும் அவனுக்கு நிகராகப் பெருகும் ஆளணியும் நம்பிக்கையும்தான்! எம் ஒவ்வொருவருள் இருக்கும் பலம்தான்! எங்கள் கைகள் ஏந்தி நிற்கும் ஆயுதம்தான்! இதில் உடன் இணைந்திட அனைவரும் வாரீர்!

உங்கள்

**ஐயப்பன்**

---

## மாநகர சபை உணவுச்சாலை திடீர் சோதனை

யாழ். மாநகர சபையினுள் இயங்கி வரும் உணவுச்சாலையை கடந்த புதன் யாழ். மாநகரசபைப் பொதுச் சுகாதார பரிசோதகர் திரு வி. மயில்வாகனம் திடீர் பரிசோதனை ஒன்றை நடத்தினார். அவர் உள்ளே சென்றசமயம் உணவுப் பண்டங்களை அலுமாரியை விட்டு வெளியே எடுக்கப்பட்டு திறந்த நிலையில் மேசை மேல் வைக்கப்பட்டிருந்ததையும், அலுமாரியினுள் உணவுப் பண்டங்கள் வைக்கப்படும் இடத்தினுள் உணவுச்சாலை நடாத்துபவரினால் பாவிக்கப்படும் சுருட்டு, புகையிலை வைக்கப்பட்டிருந்ததையும் அவதானித்து உணவுவிடுதிச் சாலையிற் சுகாதாரத்தைப் பேண நடவடிக்கை எடுக்குமாறு உரிமையாளரை அவர் எச்சரித்தார். [17]

ஈழநாதம்

# வட-கிழக்கு ஆஸ்பத்திரிகள் மத்திய அரசு கையேற்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு ஆஸ்பத்திரி அதிகாரத்தை மாகாணசபை இழக்கிறது. இந்த அதிகாரம் மீண்டும் மத்திய அரசிடம் கை மாறுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளை நிர்வகித்து வரும் அதிகாரம் மாகாண சபையிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இது பழையபடி சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகளிடம் இது விடயம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகள் முதலில் இந்த அதிகார மாற்றத்திற்கு உள்ளாகும் என தெரியவருகின்றது.

இதுவரை யாழ். போதனா வைத்தியசாலை மாத்திரமே மத்திய வைத்திய சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா விவசாயக் கல்லூரி மத்திய அரசு கையேற்பு

(கொழும்பு)

வவுனியா விவசாயக் கல்லூரி வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்திலிருந்து பறிக்கப்படவுள்ளது என கொழும்புச் செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## தேர்தலையொட்டியே இராணுவத் தாக்குதல்

### ஹரி குணதிலகா தெரிவிப்பு

(கொழும்பு)

'அடுத்த வருடம் தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் இராணுவத்தின் சமீப காலத் தாக்குதல்கள் அரசியல்நோக்கமுள்ளதாகவேதென்படுகிறது. கடந்த ஒரு வருடகாலமாக இராணுவம் என்ன செய்கிறது என்ற கேள்வி எழுகிறது. சிங்களப் பொது மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையாகவே சமீபத்திய கிளாலி மீதான இராணுவ நடவடிக்கை தென்படுகிறது.'

இவ்வாறு முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

'இந்தஇராணுவநடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளின் கிளாலி கடல் நீரேரி உபயோகத்தை இராணுவம் தடை செய்திருந்தால் இது பெறுமானம் உள்ளதாக இருக்கும்' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மென் பந்து கிரிக்கெற்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று மாலை 2.30 மணிக்கு நடைபெற இருக்கின்றன.

இப் போட்டிகளில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும், மத்திய கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும் ஈடுபடவுள்ளன.

## நெஞ்சை விட்டு நீங்கா 30-ம் நாள் கண்ணீர்ப்பூக்கள்



## தேர்வாளர் கூட்டம்

தமிழீழ பொது கல்வி தேர்வின் புள்ளி வழங்குந் திட்டங்களைச் செம்மைப் படுத்துவதற்கும், முன்னோடி விடைத்தாள்கள் சிலவற்றைப் பரிசீலனை செய்வதற்கும் அனைத்து முதன்மை / மேலதிக முதன்மைத் தேர்வாளர்களுக்கான கூட்டம் வரும் திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு மேற்படி பேரவை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். முதன்மைத் தேர்வாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுக்கொள்கிறார்.

## உளவியல் ஆய்வரங்கு

மாதம் ஒரு உளவியல் ஆய்வரங்கு வரிசையில் ''நான்'' சஞ்சிகையினரின் ஆதரவுடன் நடத்தப்படும் கருத்தரங்கு இன்று பிற்பகல் நான்கு மணியளவில் பருத்தித்துறை வீதியிலுள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய கருத்தரங்கில் அருட்திரு எட்வின் அடிகளார் மற்றும் சாந்தியகம் பணிப்பாளர் ஏ.வி. ஆனந்தராசா, திருமதி கோகிலாமகேந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

## கண்டெடுப்பு

சுப்பையா செல்லத்துரை என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## நிர்வாகசேவை பரீட்சை கொழும்பில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை கொழும்பில் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## தகுந்த காரணமிருப்பின் புகலிடம் வழங்க சட்டமூலம்

(பாரிஸ்)

எந்தவொரு வெளிநாட்டவரும் தகுந்த காரணங்களைக் கொண்டிருந்தால் புகலிடம் பெறுவதற்கு வகை செய்யும் விதத்தில் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய பிரான்சின் பிரதமர் எட்வார்ட் பலதூர் முயற்சிகள் எடுத்துள்ளார். ஐரோப்பிய சமூக நாடுகளில் அரசியல் புகலிடம் கோருவோரை நடத்துவது போன்று பிரான்சிலும் நடத்துவதற்கு இச் சட்ட மூலம் வகை செய்யும் என்று கருதப்படுகிறது.

## கற்பித்தல் உபகரண கண்காட்சி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் நடாத்தும் ''ஆசிரியர் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி'' எதிர்வரும் திங்...

# யாழ். அரச அதிகாரிகள் கொழும்பில் பெருநாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடமையில் இருக்கும் சில அரச உயர் அதிகாரிகள் உத்தியோக பூர்வ அடிப்படையில் கொழும்பு செல்வதில் அபரிமிதமான ஆர்வம்காட்டி வருகின்றனர்.

இவ்வாறு இவ் அதிகாரிகள் காட்டிவரும் கரிசனை காரணமாக இவர்களது கடமை நேரத்தில் பெரும்பகுதி கொழும்பு நகரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் கழிந்துபோவது வழமையாகிவிட்டது.

சில அதிகாரிகள் கடமை காரணமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாட்களை விட கொழும்பில் தங்கியிருக்கும் நாட்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இதேபோல இவ்வாறு தங்கியிருக்கும் காலப்பகுதியில் அலுவலக கடமைகளைவிட அதிகமான சொந்தக் கடமைகளைச் செய்வதிலேயே அக்கறையாகவும் உள்ளனர்.

இவ்வாறான உத்தியோகத்தர்களின் சொந்த விடயங்களைப் பொறுத்தே அவர்களின் கொழும்புக்கான உத்தியோகபூர்வ விஜயங்கள் அமையும். இவ்வாறான உத்தியோகத்தர்கள் சொந்த விடயமாக கொழும்பு செல்லவேண்டியிருந்தால் அதனுடன் கூடவே அலுவலகத் தேவையாகவும் கொழும்புக்கு செல்லவேண்டியேற்படும். இவ்வாறு கொழும்பு செல்வதற்குரிய அலுவலகத் தேவை தொடர்பான காரணத்தை கூறுவதற்கு இவ் அதிகாரிகள் அதிகம் சிரமப்படுவதில்லை. (க) (நி)

## கொழும்புக் கடற்கரையில் தற்கொலை படையினர் உடை

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் கடற்கரைப் பகுதியில் கடந்த புதன்கிழமை கண்டெடுக்கப்பட்ட அலுமினியப் பெட்டியொன்றிலிருந்து தற்கொலைப்படையினர் அணிவது போன்ற உடையொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக கொழும்பு பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கண்டு பிடிக்கப்பட்ட உடையினுள் வெடி மருந்துகளும் வெடிக்க வைக்கும் உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்ததாகவும் இது பிரேமதாச, ராஜீவ்காந்தி கொலைகளில் சம்பந்தப்பட்ட தற்கொலைப்படையினர் அணிந்திருந்த உடையினை ஒத்திருந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜனாதிபதி மாளிகை முன் நின்ற மர்ம வாகனம்

ஜனாதிபதி விஜேதுங்கவின் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக உள்ள சேர் ஜோன் ஜெயதிலகா மாவத்தையில் வெள்ளை டெயோட்டா காரினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கார் உரிமையாளரை நீண்ட நேரம் காணாததால் கார் குறித்த அச்சம் அப்பகுதியில் ஏற்பட்டது.

உடனடியாக பொலிசார் அழைக்கப்பட்டனர். குண்டு குறித்தும் பரிசோதனை நடத்தப்பட்டது. கார் பகுதிபகுதியாக கழட்டப்பட்டுபரிசோதிக்கப்பட்டது காரில் குண்டு எதுவும் இல்லாததால் அக்கார் பின்னர் பொலிஸ் நிலையம் இழுத்து செல்லப்பட்டது.

## காத்தான்குடி பகுதியில் புதிய கெரில்லா இயக்கம்

மட்டக்களப்புகாத்தான்குடி பகுதியில் புதிய கெரில்லா இயக்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார்தெரிவிக்கின்றனர்.

இந்தக் குழுவினர் முஸ்லிம் விடுதலை மஜாதீன் கெரில்லா இயக்கம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

காத்தான்குடி வர்த்தகர் ஒருவரிடம் பணம்பறிக்க முயன்றபோது கைதான இரு இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்ட போதே இவ் விபரம் வெளியாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

## உலர் உணவு விநியோகம்

(தொல்புரம்)

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்தோர்களுக்கான உலர் உணவுமுத்திரைகளுக்குகாரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்ககிளைகள்மூலம் நிவாரண உலர் உணவுப் பொருள்கள்

## உதைபந்தாட்டம்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிகளுக்கிடையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டம் மேற்படி மைதானத்தில் இன்று 3-30 மணிக்கு யங் கென்றிஸ்-A எதிர் யாழ் பாரதி A, 4-30 மணிக்கு பாடுமீன் B எதிர் ஜோன் கெனடி A விளையாடும்.

## புலமைப் பரிசில் அதிகரிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், சம்மாந்துறை, அம்பாறை, கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில்உள்ள 28 தொழில் நுட்பக் கல்லூரிகளில்படிக்கும் வசதிகுறைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதி 500 ரூபாவிலிருந்து 2500 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் ஜனவரி முதல் அமுலுக்கு வரும்.

## விபத்தில் படுகாயம்

[தென்மராட்சி]

மோட்டார் சைக்கிள் லான்மாஸ்ரர் விபத்து ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தவர் காலில் படுகாயமடைந்து சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 1.30மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நாகர்கோவிலைச் சேர்ந்த இ அன்ரன் [30] என்பவரே படுகாயமடைந்தார். மற்றவர் மயிரிழையில் உயிர்தப்பினார். (86)

## ஆங்கிலமொழி தினப்போட்டி

[யாழ்ப்பாணம்]

மருதனார் மடக் கோட்ட ஆங்கிலமொழித் தினப் போட்டியில் கொத்தணி மட்டப் போட்டிகளில் முதலிரண்டு இடங்களைப் பெற்றவர்களுக்கான இறுதிப் போட்டிகள் இன்றும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

கிரிக்கெற் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று மாலை 2.30 மணிக்கு நடைபெற இருக்கின்றன.

இப் போட்டிகளில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும், மத்திய கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும் ஈடுபடவுள்ளன.

என்ற கேள்வி எழுகிறது. சிங்களப் பொதுமக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையாகவே சமீபத்திய கிளாலி மீதான இராணுவ நடவடிக்கை தென்படுகிறது.'

இவ்வாறு முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

'இந்தஇராணுவநடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளின் கிளாலி கடல் நீரேரி உபயோ

## நெஞ்சை விட்டு நீங்கா 30-ம் நாள்கண்ணீர்ப்பூக்கள்



### திரு. ஆ. கனகசபாபதி
அவர்கள்

மலர்வு: 23-03-1921

உதிர்வு: 10-09-1993

மாதம் ஒன்று சென்றதையா
ஆறவில்லை எம்நெஞ்சமய்யா
தீராத சோகமதை
நீர்வந்து பாருமய்யா!

வெள்ளை உடை தரித்து
வெண்முத்து சிரிப்புடனே
வளைய நீர் வந்ததை
மறக்குமோ எம்விழிகள்.

ரி. ஆர். ஆர். ஓ. நிறுவனத்தின்
தூணாக நீர் இருந்தீர்
செய்தொழிலே தெய்வமென
நிறுவனத்திற்காய் நீர் உழைத்தீர்!

சக ஊழியர்க்கு துன்பம் என்றால்
அங்கிருப்பீர் பங்குகொள்ள இன்று
உம்பிரிவில் நாம் கலங்க
நீர்மட்டும் ஏன்வரவில்லை?

கலை உள்ளம் கொண்டவனே!
கலைஞர் மனம் வென்றவனே!
நிலையில்லா வாழ்வு என்றா?
உன்வாழ்வை நீ முடித்தாய்.

உன் வாழ்வு முடிந்தாலும்
எம் நெஞ்சத்தில் நீ இருப்பாய்
நீ கண்ட கனவுகளை
நனவாக்கி நாம் முடிப்போம் .....

4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6247) T. R. R. O நிறுவனத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## கொழும்பில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை கொழும்பில் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## தகுந்த காரணமிருப்பின் புகலிடம் வழங்க சட்டமூலம்

(பாரிஸ்)

எந்தவொரு வெளிநாட்டவரும் தகுந்த காரணங்களைக் கொண்டிருந்தால் புகலிடம் பெறுவதற்கு வகை செய்யும் விதத்தில் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய பிரான்சின் பிரதமர் எட்வார்ட் பலதூர் முயற்சிகள் எடுத்துள்ளார். ஐரோப்பிய சமூக நாடுகளில் அரசியல் புகலிடம் கோருவோரை நடத்துவது போன்று பிரான்சிலும் நடத்துவதற்கு இச்சட்டமூலம் வகை செய்யும் என்று கருதப்படுகிறது.

### தி. மு. க. தலைவர்

சிக்காது பத்திரிகைகளுக்கு இது குறித்து அறிவித்து விட்டார். கட்சியின் முக்கிய பிரமுகர்கள் நேற்று கருணாநிதியைச்சந்தித்து அவரின்முடிவை மாற்றிக்கொள்ளுமாறு வேண்டினர்

இவ்வாறாக கருணாநிதியின் மனநிலை பாதிப்படைவதற்கு அண்மைக்காலத்தில் தி. மு. க. கட்சி உள்ளுக்குள்ளும் வெளியிலும் எதிர் கொண்ட நெருக்கடிகள் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கருணாநிதி தனது மகன் ஸ்ராலினை தி. மு. கவின் தலைவராக்கும் முயற்சி தோல்வி அடைவதையிட்டு அவர் மிகவும் துயருற்றிருந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இராணிப்பேட்டை சட்டசபை தொகுதியிலும், பழநி நாடாளுமன்றத் தொகுதியிலும் இடைத் தேர்தலில் தோல்வி கண்டமை கட்சியின் எதிர்காலம்பற்றிய கேள்வியையும், கருணாநிதியின் தலைமைத்துவம் பற்றிய கேள்வியையும் பலமாக எழுப்பியிருந்தது.

இந் நிலையில், மக்களின் கவனத்தை திசை திருப்பவும் கட்சி உறுப்பினர்களின் அனுதாபத்தைப் பெறவும் விடுதலைப்புலிகள் தம்மை கொலை செய்ய திட்டமிட்டுள்ளார்கள் என்ற அறிவிப்பை கருணாநிதி வெளியிட்டார் இதன் காரணத்தின் அடிப்படையில் வை. கோபாலசாமியையும் கட்சியில் இருந்து வெளியேற்றிவிடலாம் என கருணாநிதி கருதியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் கருணாநிதியின் இவ்அறிவிப்பானது அவர் எதிர்பார்த்த தாக்கத்தையோ தி. மு. கவிற்குள் அவருக்கு ஆதரவை தேடிக் கொடுக்கவில்லை மாறாக வை. கோபாலசாமியை வெளியேற்றுவதற்காக கருணாநிதியின் திட்டம் என்பதையே மக்கள் நம்பினர்.

இந் நிலையில் தான் தலைவர் கருணாநிதி தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இதேவேளை இவ் ஓய்வு அறிவிப்பு குறித்து பலர் சந்தேகமும் கொண்டுள்ளனர். இதுவும் ஒரு அரசியல் தந்திரம் எனவும் பலர் கருதுகின்றனர்.

## கற்பித்தல் உபகரண கண்காட்சி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் நடாத்தும் ''ஆசிரியர் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி'' எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

### வீரகேசரி

மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் இழந்த வாகனங்கள், ஆயுதங்கள் மற்றும் தாக்குதல்பற்றிய செய்திகளை வெளியிட்டமைக்காகவே விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. இம் முற்றுகையானது மூன்றுமணி நேரம்வரை நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

### சிறிலங்கா

காவல்துறையினரின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் கடற்படையினர் ஆழ்கடலுக்குத் தப்பிச் சென்றனர். இச் சம்பவத்தின் போது தீப்பற்றிஎரிந்துகொண்டிருந்த இரு படகுகளையும், வலைகளையும் காவல்துறையினர் மீட்டுகரை சேர்த்தனர்.

மேற்படி சம்பவத்தில் இரு மீனவர்கள் கடற்படையின் தாக்குதலில் பலியானது தெரிந்ததே.

### கட்சியை

யிருந்தனர். கருணாநிதி இல்லத்திற்கு வந்த எம். ஜி. ஆர். அ. தி, மு. க. பொதுச் செயலர் கருணாநிதி தமதுமுடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என கோரினார்.

## காத்தான்குடி பகுதியில் புதிய கெரில்லா இயக்கம்

மட்டக்களப்புகாத்தான்குடி பகுதியில் புதிய கெரில்லா இயக்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார்தெரிவிக்கின்றனர்.

இந்தக் குழுவினர் முஸ்லிம் விடுதலை மஜூதீன் கெரில்லா இயக்கம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

காத்தான்குடி வர்த்தகர் ஒருவரிடம் பணம்பறிக்க முயன்றபோது கைதான இரு இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்டபோதே இவ் விபரம் வெளியாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

## உலர் உணவு விநியோகம்

(தொல்புரம்)

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்தோர்களுக்கான உலர் உணவுமுத்திரைகளுக்குகாரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்ககிளைகள்மூலம் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

புரட்டாதி மாதத்திற்குரிய நான்கு வார நிவாரண உலர் உணவுப்பொருள்கள் விநியோகிக்கப்படுகிறதெனவும், அரிசி, மாவு, சீனி, கடலைப்பருப்பு, கைலன்ட் பால்மா, சவர்க்காரம் போன்ற பொருள்கள் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறதெனவும் மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

### இராணுவம்

ரால் கூட்டப்பட்ட கூட்டமொன்றிற்கு சமுகமளிக்கவில்லை என்பதற்காக பொறியியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்

### யாழ்தேவி

பிரதான கோட்டையான யாழ்ப்பாணத்தை பிடிக்கவும், பிடித்ததை வைத்துக்கொள்ளவும்மிகப்பெரிய விலைகொடுத்தாகவேண்டும் என ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் நன்கு தெரிந்துள்ளதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

கிளாலி வாவியில் புலிகளின் வளங்களை அழித்து விட்டதாக பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கூறுகிறது. ஆனால் அப்பகுதி ஏற்கனவே பயன்படுத்தப்பட ஆரம்பித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன எனவும் பி. பி. ஸி. சுட்டிக் காட்டியது.

தாக்குதல் குறித்த முன்னைய நிலையிலிருந்து எந்த மாற்றமும் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கூறுவது இத்தாக்குதலை மேற்பார்வையிட்ட இராணுவ அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையே ஓரளவு கருத்து வேற்றுமை இருந்திருக்க வேண்டும் என்பதை காட்டுகின்றது எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

### உதைபந்தாட்டம்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிகளுக்கிடையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டம் மேற்படி மைதானத்தில் இன்று 3-30 மணிக்கு யங் கென்றிஸ்-A எதிர் யாழ் பாரதி A, 4-30 மணிக்கு பாடுமீன் B எதிர் ஜோன் கெனடி A விளையாடும்.

மடைந்து சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 1.30மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நாகர்கோவிலைச் சேர்ந்த இ அன்ரன் [30] என்பவரே படுகாயமடைந்தார். மற்றவர் மயிரிழையில் உயிர்தப்பினார். (86)

## ஆங்கிலமொழி தினப்போட்டி

[யாழ்ப்பாணம்]

மருதனார் மடக் கோட்ட ஆங்கிலமொழித் தினப் போட்டியில் கொத்தணி மட்டப் போட்டிகளில் முதலிரண்டு இடங்களைப் பெற்றவர்களுக்கான இறுதிப் போட்டிகள் இன்றும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 08-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11131

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-6274, 24-4207, 26-2391, 24-5818, 26-1285, 27 9756, 26-0649, 28-8589, 40-4760, 26-4376, 26-3495, 24-4726, 24-5967, 42-3945, 28 3439

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-0488, 26-7627, 42-3114, 24-7941, 42-1623, 27-4019, 28-4545, 26-3183

## மரண அறிவித்தல்

தெல்லிப்பழை
### கிருஸ்ணர் தம்பு

புதுத்தோட்டம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சங்குவேலியில் வசித்தவருமாகிய கிருஸ்ணர்தம்பு நேற்று காலமானார். அன்னார் கிருஸ்ணர் அன்னமுத்துவின் அன்பு மகனும், சண்முகம் குழந்தையின் அன்புமருமகனும், திருமதிபாக்கியத்தின் அன்புக் கணவரும், கண்ணன் [கிளிநொச்சி], கனகேஸ்வரன் [மகாஜனக் கல்லூரி], கனகநாயகி, கருணாகரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி மேரிபுஸ்பராணி, விஜயலட்சுமி, சிவநாதன் [தெல்லிப்பழை சைவப்பிரகாசவித்தியாசாலை] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜோய் யோன்சன், ஜொய்சி, ஜொசாப்பின், ஜோய்ஜசிந்தன், துஷ்யந்தன், விதுஷா, தர்சன், ராமகிருஸ்ணன், சிறிகணேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சரவணமுத்து, காலஞ்சென்ற சின்னத்துரை, சின்னையா, தங்கம்மா, இராசா, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இறுதிக் கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு சங்குவேலி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில்நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சங்குவேலி வடக்கு, சங்குவேலி. (6249) பிள்ளைகள், மருமக்கள்.